**மாதிரி வினாத்தாள்**

ஆவர்த்தன அட்டவணை - II - பகுதி V

12th Standard

Reg.No. : | | | | | | |

**வேதியியல்**

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

III.வினா எண்15-ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

Time : 01:15:00 Hrs Total Marks : 60

## பகுதி-அ

5 x 1 = 5

1) XY என்ற சேர்மத்தில் X மற்றும் Y ஆகியவற்றின் எலெக்ட்ரான் கவர் திறன் மதிப்புகள் முறையே 2.1 மற்றும் 3.8 எனில் X மற்றும் Y ஆகியவற்றிற்கிடைப்பட்ட பிணைப்பின் தன்மை

(a) பெரிதும் அயனிப்பிணைப்பு (b) பெரிதும் சகப்பிணைப்பு (c) 50% அயனிப்பிணைப்பு (d) முழுவதும் சகப்பிணைப்பு

2) தனிமங்களின் எலெக்ட்ரான் கவர் திறன் மதிப்புகள் மூலம் அறிவது

(a) பிணைப்புத்தரம் (b) அணு ஆரம் (c) அயனியாக்கும் ஆற்றல் (d) பிணைப்புகளின் முனைவுறும் திறன்

3) $K^+$அயனியின் நிகர அணுக்கருச்சுமை

(a) 5.75 (b) 7.75 (c) 8.35 (d) 9.35

4) A மற்றும் B ஆகியவற்றின் எலக்ட்ரான் கவர்திறன் மதிப்புகள் முறையே 1.1 மற்றும் 2.8 எனில் AB மூலக்கூறை குறிக்கும் முறை

(a) $A^{\delta+}B^{\delta-}$ (b) $A^{\delta-}B^{\delta+}$ (c) A-B (d) $A^+B^-$

5) கார மண் உலோகங்களின் எலக்ட்ரான் நாட்டம்

(a) பூஜ்ஜியம் (b) எதிர் குறியுடையது (c) நேர் குறியுடையது (d) முடிவில்லாதது

## பகுதி - ஆ

10 x 3 = 30

6) $1s^2\ 2s^2\ 2p^6\ 3s^2\ 3p^5$ என்ற எலக்ட்ரான் அமைப்பு கொண்ட அணுவின் கடைசி எலக்ட்ரானுக்கு நிகர அணுக்கரு மின் சுமையைக் கணக்கிடு .

7) போரானை விட பெரிலியம் அதிக அயனியாக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பதேன் ?

8) எலக்ட்ரான் நாட்டத்தைப் பாதிக்கும் காரணிகள் யாவை?

9) கீழ்க்கண்ட அயனி ஆரங்களை ஏறுவரிசையில் எழுதுக $Ca^{2+}$, $S^{2-}$ , $Cl^-$ மற்றும் $K^+$

10) கீழ்கண்டவற்றின் ஆரங்களின் மதிப்பை இறங்குவரிசையில் எழுதுக Sn, $Sn^{2+}$மற்றும் $Sn^{4+}$

11) கீழ்கண்டவற்றின் ஆரங்களின் மதிப்பை ஏறுவரிசையில் எழுதுக $Ca^{2+}S^{2-}Cl^-$மற்றும் Cl

12) K மற்றும் Caல் எது அதிக அயனியாக்கும் ஆற்றலை கொண்டது ஏன்?

13) F மற்றும் Cl -ன் அயனியாக்கும் ஆற்றலை ஒப்பிடுக.

14) I மற்றும் Br -ன் அயனியாக்கும் ஆற்றலை ஒப்பிடுக.

15) a) Ca மற்றும் Be -ன் அயனியாக்கும் ஆற்றலை ஒப்பிடுக.

**(OR)**

b) Cl மற்றும் I -ன் அயனியாக்கும் ஆற்றலை ஒப்பிடுக.

## பகுதி - இ

5 x 5 = 25

16) பாலிங் முறையில் அயனி ஆரத்தை கணக்கிடும் முறையை விளக்குக .

17) அயனியாக்கும் ஆற்றலைப் பாதிக்கும் ஏதேனும் மூன்று காரணிகளை விளக்குக.

18) எலெக்ட்ரான் நாட்டத்தைப் பாதிக்கும் பல்வேறு காரணிகளை விளக்குக.

19) எலக்ட்ரான் கவர்தன்மை மதிப்பைக் கொண்டு அணுக்களுக்கு இடையே உள்ள பிணைப்பை எவ்வாறு கண்டறிவாய்?

20) எலக்ட்ரான் கவர் தன்மை மதிப்பைக் கொண்டு, முனைவு சக பிணைப்பின் சதவீத அயனித்தன்மையை எவ்வாறு கண்டறிவாய்?

*******************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in